NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 06 | தமிழ் மொழியும் இலக்கியமும் | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ......................                                        புள்ளிகள்

## பகுதி – I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. மாலதி "தவலையைத் தலையில் தூக்கி வந்தாள்" இதில் தவலை என்பதன் பொருள்
   1. தவளை  2. விறகு  3. குடம்  4. புத்தகப்பை

2. சாதகம் என்பதன் எதிர்ச்சொல்
   1. உலகம்  2. கோபம்  3. பாதகம்  4. செருக்கு

3. நரி ஊளையிடும்: பன்றி
   1. சீறும்  2. உறுமும்  3. கனைக்கும்  4. முக்காரமிடும்

4. தங்கை கோபத்தில் ........................ வென இருந்தாள்.
   1. குடுகுடு  2. சிடுசிடு  3. படுபடு  4. கலகல

5. 'நற்றுணை' என்பதனைப் பிரித்தால் வருவது
   1. நல் + துணை  2. நல்ல + துணை  3. நற்று + துணை  4. நற் + துணை

6. உயிர்மெய்க் குறில் எழுத்துக்களின் தொகையாக அமைவது
   1. 216  2. 90  3. 126  4. 247

7. நண்பர்கள் இருவரும் ...................... போல சண்டையிட்டனர்.
   1. சித்திரப் பதுமை  2. நகமும் சதையும்  3. கீரியும் பாம்பும்  4. அத்தி பூத்தாற் போல

8. இயல், இசை, நாடகம் என்பது
   1. முத்தமிழ்  2. முக்குடி  3. மூவேந்தர்  4. முச்சுடர்

9. 'குப்பன்வாழ் லயத்தினது கூரை குளமாக்கும் வீட்டை மழைத்தாரை' இதில் மலைத்தாரை என்பது
   1. பூமாலை  2. மழை நீர்  3. லயம்  4. வானம்

10. ஒழுக்கமுடைமையில் கூறப்படும் பத்துக் கட்டளைகளில் ஒன்று அல்லாதது
    1. பொய் சொல்லாதே  2. களவை நினையாதே
    3. புறங்கூறாதே  4. ஒழுக்கம் தவறு

11. 'சத்தியாக்கிரகம்' என்பது
    1. ஆயுதப்போர்  2.அகிம்சைப் போராட்டம்  3. உண்ணாவிரதம்  4. கிளர்ந்தெழுதல்

12. "நீ வருவது எனக்குத் தெரியாது" இங்கே நீ என்பது குறிப்பது
    1. முன்னிலை  2. தன்மை  3. படர்க்கை  4. பயனிலை

13. மழவராயன் தன்னைத்தானே புகழ்ந்து பேசிக்கொண்டான். இங்கு மழவராயனின் செயற்பாடு
    1. தாழ்வு மனப்பான்மை  2. ஆணவம்  3. தற்பெருமை  4. அடக்கம்

14. 'ஞிமிறென இன்புறு' இங்கு ஞிமிறு என்பது
    1. வண்டு  2. கதிரவன்  3. நாய்  4. கடவுள்

15. ‘அரிசியும் ………………….. கொடுப்பது எதுவோ’ எனும் பாடல் வரியில் இடைவெளியில் இடம்பெறும் சொல் எது?
   1. வாழ்க  2. அறுசுவை  3. பருப்பு  4. தேன்

16. இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பவற்றைக் குறிக்கும் பெயர்
   1. அறுசுவை  2. ஆறு உணவு  3. ஆறுமுகம்  4. ஆறு கறிகள்

17. நூட்டாண்டு என்பதை எழுத்துப் பிழையின்றி எழுதினால்
   1. நூட்ராண்டு  2. நூற்றாண்டு  3. நூற்டாண்டு  4. நூட்றான்டு

18. ‘கம்பரிற் பாலர் கல்வி’ எனும் கட்டுரையில் எமையுடையிறைவன் எனக் கூறப்படுபவர்
   1. இராவணன்  2. சீதை  3. இராமன்  4. தசரதன்

19. குறும்பா எனும் பதம் குறித்துக் காட்டுவது
   1. நீண்ட பாட்டு  2. குறுகிய பாட்டு  3. குறிஞ்சித் தென்னவன்  4. அலுவலகம்

20. நேறுளு என்ற ஆங்கில பதத்தால் குறிப்பிடப்படுவது
   1. நான்கு மாதங்கள்  2. நான்கு இனங்கள்  3. நான்கு திசைகள்  4. நான்கு செய்திகள்

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

01. பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1. நியூட்டன் எப்போது பிறந்தார் ?
    2. நியூட்டன் முதன்முதலில் எதனைக் கண்டுபிடித்தார் ?
    3. நியூட்டன் தனது பணியில் ஈடுபட்டார் ?

(2+2+3=7 புள்ளி)

02. 1. மனிதன் எவற்றால் மேன்மையடைய முடியும் ?
    2. இகழ்ச்சிக்கு ஆளானோர் யார் ?
    3. ஒழுக்கம் பற்றிக் கூறப்படும் திருக்குறள் இரண்டு தருக.

(1+2+4=7 புள்ளி)

03. 1. குறும்பா பாடிய ஆசிரியர்கள் யாவர் ?
    2. கம்பி எண்ணுதல் என்றால் என்ன ?
    3. இராமனுடைய சகோதரர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(2+1+4=7 புள்ளி)

04. 1. புணர்ச்சி வகைகளைத் தருக.
    2. விகாரப் புணர்ச்சியின் மூன்று வகைகளையும் குறிப்பிட்டு அதற்கான உதாரணத்தையும் தருக.
    3. ‘மாடு வேலியால் பாய்ந்தது’ இவ்வாக்கியத்தை எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் அடைமொழி கொண்டு எழுதுக.

(2+3+2=5 புள்ளி)

03. 1. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
    1. எனது பாடசாலை
    2. வாசிப்பின் முக்கியத்துவம்
    3. மரங்களை வளர்ப்பதன் அவசியம்
    4. திருக்குறள்

(20 புள்ளிகள்)

04. வெளியூரில் உள்ள நண்பன் ஒருவனக்கு தமது பாடசாலையில் இடம்பெறவுள்ள விளையாட்டுப் போட்டியைக் கண்டுகளிக்க வருமாறு அழைத்து 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)